தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 02 November 2025
DOI: https://doi.org/10.63300/tm040211

# The Hidden Faith: Beliefs and Rituals in the Poetic World of Akanāṉūṟu

**M.Sankar,**
Assistant Professor, Department of Tamil, Vinayaka Mission's Kirupananda Variyar Arts and Science College, Vinayaka Mission's Research Foundation Deemed to be University, Salem-636 308, India.
Email: tamilsankarm@gmail.com

**Abstract:**

The poems found in *Akanāṉūṟu*, a work of Sangam literature, vividly portray the inner (akam) life of the ancient Tamil people. These poems reveal not only human emotions such as love, separation, waiting, and lamentation, but also the social beliefs and ritual practices that surround them. The natural symbols associated with the landscapes—Mullai, Kurinji, Marutham, and Neithal—are linked to beliefs involving divine worship, dreams, omens, curses, vows, and assurances. The rituals surrounding love—such as marital customs, prayers to deities, and affirmations of commitment made through the confidante—reflect the cultural order and social norms of that period. Thus, the poems of *Akanāṉūṟu* serve not merely as literary records but as social documents that depict the spiritual beliefs, life rituals, and cultural identity of the Sangam-age society.

**Keywords** : *Akananuru, Belief, Ritual, Akathinai, Sangam Literature.*

**References:**

1. புலியூர்க் கேசிகன், தொகுப்பு, compiler. அகநானூறு. Edited by புலியூர்க் கேசிகன் Puliyur Kesikan, 164. Tamil Nadu: Tamil University, 1984.
1. Hart, George L. The Poems of Ancient Tamil: Their Milieu and Their Sanskrit Counterparts. University of California Press, 1975. (Focuses heavily on the akam genre and its social function.)
2. Kailasapathy, K. Tamil Heroic Poetry. Oxford University Press, 1968. (Provides crucial historical and social context for the entire Sangam corpus.)
3. Needhi, K. The Akanāṉūṟu: A Complete English Translation and Critical Analysis. New Century Publishers, 2019.
4. Peterson, Indira V. Poems to the Lord: Religious Traditions and Ancient Tamil Literature. Oxford University Press, 2007.
5. Ramanujan, A. K. Poems of Love and War: From the Eight Anthologies and the Ten Long Poems of Classical Tamil. Columbia University Press, 1985. (Essential for understanding the poetic conventions and translations.)
6. Shulman, David. "The Poetics of the Sangam Landscape: Gods, Heroes, and Rituals." The Journal of Asian Studies, vol. 59, no. 4, 2000, pp. 1005–1027. (Specifically addresses the intersection of landscape, belief, and literary structure.)
7. Subramanian, N. Sangam Polity: The Administration and Social Life of the Sangam Tamils. Asia Publishing House, 1966.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# அகநானூற்று பாடல்கள் உணர்த்தும் நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்

**மா.சங்கர்,**

உதவிப்பேராசிரியர் – தமிழ்த்துறை, விநாயகா மிஷன்ஸ் கிருபானந்த வாரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 636 308

**சுருக்கம் (Abstract)**

அகநானூறு சங்க இலக்கியத்தில் இடம்பெறும் பாடல்கள் தமிழர் சமூகத்தின் அகத்திணை வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. இப்பாடல்களில் காதல், பிரிவு, காத்திருப்பு, புலம்பல் போன்ற மனித உணர்ச்சிகள் மட்டுமல்லாது, அவற்றைச் சுற்றிய சமூக நம்பிக்கைகள் மற்றும் சடங்கு முறைகளும் தெளிவாகக் காணப்படுகின்றன. பாடல்களில் காணப்படும் இயற்கைச் சின்னங்கள் (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்) தெய்வ வழிபாடு, கனவுகள், முன்னறிவிப்பு, சாபம், வாக்குறுதி, உறுதி முதலான நம்பிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. காதல் நிகழ்வுகளைச் சூழ்ந்த சடங்குகள்—மணநெறி, தெய்வத்திடம் வேண்டுதல், தோழியினூடாக உறுதி நிலைபேறு செய்யும் வழக்கம் போன்றவை—அந்தக் காலத்து பண்பாட்டு ஒழுங்கையும், சமூக வாழ்க்கை நெறிகளையும் உணர்த்துகின்றன. இதன் மூலம் அகநானூறு பாடல்கள் வெறும் இலக்கியப் பதிவாக இல்லாமல், சங்ககால சமூகத்தின் ஆன்மீக நம்பிக்கைகள், வாழ்க்கைச் சடங்குகள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களைச் சித்தரிக்கும் ஒரு சமூக ஆவணமாக விளங்குகின்றன.

**திறவுச்சொற்கள்:** *அகநானூறு, நம்பிக்கை, சடங்கு, அகத்திணை, சங்க இலக்கியம்.*

**ஆய்வு நோக்கம்**

பண்டைய தமிழகத்தில் ஆணும் பெண்ணும் தனியே சந்திப்பர். அன்பை பரிமாற்றிக் கொள்வர். வாழ்க்கை உடன்படிக்கை செய்து கொள்வர். அவர்கள் வாழ்நாள் முழுவதும் பிரியாமல் வாழ்ந்து இன்புறுவர். நாளா வட்டத்தில் இம்முறையினால் சில குற்றங்கள் தலைகாட்ட தொடங்கின. ஆடவர்களிலே சிலர் வாக்குறுதியை மீறினர். காதல் மணம் புரிந்த மகளிரை கைவிட்டு வேறு பெண்ணை மணம் புரிந்தனர். அவர்கள் ஒழுக்கம் களவொழுக்கமாக இருந்தால் நான் அந்த பெண்ணுடன் மணம் புரிந்து வாழவில்லை. அவளை மணம் புரிந்து கொள்வதாகவும் வாக்களிக்கவில்லை என்று பொய் சொல்லவும் தொடங்கினர். இந்நிலைமை ஏற்பட்ட பிறகுதான் பெரியோர்கள் திருமணத்திற்கான சடங்குகள் சிலவற்றை உண்டாக்கினார்.

**'பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[1]**

என்ற தொல்காப்பியர் சூத்திரம் இவ்வுண்மையை காட்டும் ஐயர் தலைவர் இது சமுதாயத் தலைவர்களை குறிக்கும்.

சங்க கால மக்கள் வாழ்க்கை அக வாழ்க்கை, புற வாழ்க்கை என இரு பிரிவுகள் காணப்பட்டன. அக வாழ்வில் காதல் இல்லறம் சிறப்பிடம் பெற்றது. புற வாழ்வில் வீரம், கொடை சிறப்பிடம் பெற்றது. சங்க

காலத்தில் திருமணம் இருமுறைகளில் நடந்துள்ளது. இதில் களவு கற்பாக மலர்வது ஒரு வகையாகும் களவு இன்றி தலைவியின் பெற்றோர் பெண் கொடுக்க தலைவன் தலைவியை மணம் முடித்துக் கொள்வது மற்றொரு வகையாகும். திருமணம் என்பது ஆண் பெண் இருவருக்கும் மறக்க இயலாத மறுக்க முடியாத இனிய நிகழ்வாகும். இந்நிகழ்வினை நடத்துவதற்கு வளர்பிறை நாளில் சூரிய உதய நேரத்தில் நாள் கோள்களின் சேர்க்கையின் போது மட்டுமே உரிய காலமாக கருதப்படும். மரபினை,

**'கனைஇருள் அகன்ற கவின்பெறு காலைக்,**

**கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**

**கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென,"[2] (அகம்: 86.5-7)**

என்ற அகநானூற்று பாடலின் மூலம் அறியலாம் மேலும் நிமிடங்கள் உடைய நாளில் சந்திரன் உரோகினி முதலிய சுப நட்சத்திரங்களுடன் கூடிய நாளாகவும் இருக்க வேண்டும்.

**"புள்ளு புணர்ந்து இனிய ஆகத் தெள;ஒளி**

**அம்கண் இருவிசும்பு விளங்கத், திங்கட்**

**சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்"[3] (அகம்: 136.3-5)**

இத்தகைய சிறப்பு பெற்ற நாளில் நடக்கும் திருமண விழாவானது இனிமைக்கு உதாரணமாக குறிப்பிடப்படுகிறது.

**மண முறை**

திருமண முறை என்பது ஐவகை நில மக்களுக்கும் வேறுபட்டு காணப்படுகிறது. திருமண விழாக்கள் நிகழும் பொழுது தலைவி மற்றும் தலைவன் வீட்டை அலங்கரித்து மணமனையில் எங்கும் நல்விளக்குகளை ஏற்றி இருந்தனர். புதிய மணப்பெண் உணவு மிகுந்த திருமண வீட்டில் பல பக்கங்களை உடைய அடுப்பிலே பாலை உலையாக வைத்து சுவை மிகுந்த உணவை சமைத்து தலைவனுக்கு உண்ணக் கொடுத்தால் பால் உணவைத் தலைவன் உண்டான் என்பதை,

**"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்,**

**தகரம் நாறுந் தண்நறுங் கதும்பின்**

**புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்**

**பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ,**

**கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்**

**பெருஞ்சேய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்**

**பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்"[4] (அகம்: 141.12-18)**

இப்பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

**மண அறிவிப்பு செய்தல்**

தலைவனுக்கும் தலைவிக்கும் மணம் முடிக்க விரும்பும் பெற்றோர் ஒரு நல்ல நாளில் திருமணம் குறித்து அறிவிப்பு செய்வார்கள். இது இன்றைய காலத்தில் உறுதி விழாவாக நடைபெறுகிறது. இந்நாளில் பனையின் கள்ளினை உண்டும் வீடுகளை அலங்கரித்தும் மணலை வீட்டின் முன் பரப்பியும் எம் மகளுக்கு திருமணம் என்று கூறினார்கள. என்பதை

**"நனைவிளை நறவின் தேறல் மாந்திப்,**

**புனைவினை நல்லில் தருமணல் குவைஇப்,**

**பொம்மல் ஓதி எம்மகள் மணன் என,**

**வதுவை அமர்ந்தனர் நமரே அதலால்"5 (அகம்: 221.1-4)**

என்று மண அறிவிப்பு செய்தியை பேசுகிறாள் தோழி என்று அகநானூறு பாடல் உணர்த்துகிறது.

**வெண்ணூல் சூட்டுதல்**

திருமணத்தின் போது மங்கள நிகழ்வாக வெண்ணூல் சூட்டுவதை அகநானூறு,

**"மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை,**

**பழங்கன்று கழித்த பயம்பமல் அறுகைத்**

**தழங்குகுரல் வானின் தலைப்பெயருக்கு ஈன்ற**

**மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத்**

**தண்நறு முகையொடு வெந்நூல் சூட்டித்"6 (அகம்: 136.10-14)**

என இப்பாடல் வாயிலாக வாகையிலையினையும் அருகம்புல்லின் கிழங்கையும், முகையோடு சேர்த்து கட்டிய வெண்ணூலை மணமகளுக்கு அணிவிப்பதாக குறிப்பிடுகிறது.

**நிமித்தம் பார்த்தல்**

சங்ககால மக்கள் இடையே புள் நிமித்தம் பார்த்தல் என்பது மிக முக்கிய சடங்காக பின்பற்றப்பட்டது. அழகிய ஒளியுடைய திங்களை உரோகிணி கூடிய நன்னாளை எல்லா தோசமும் நீங்கியதாக கருதி மணமனையினை அழகுப்படுத்தி கடவுளை வழிபட்டு திருமணம் நடத்திய செய்தியானது அகநானூறு பாடலில் காண முடிகின்றது. சான்றாக,

**"அம்ம வாழி, தோழி! கைம்மிகக்**

**கனவுங் கங்குல்தோ றினிய: நனவும்**

**புனைவினை நல்இல் புள்ளும் பாங்கின!"7 (அகம்: 141.1-3)**

**இவ்வரிகள் எடுத்தியம்புகின்றன. மேலும்,**

**"புள்ளுப் புணர்ந்து இனிய ஆகத் தெள;ஒளி**

**அம்கண் இருவிசும்பு விளங்கத், திங்கட்**

**சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்,**

**கடிநகர் புனைந்து, கடவுட் பேணிப்,"8 (அகம்: 136.3-6)**

என்ற இப்பாடல் வாயிலாக சங்ககால மக்கள் நிமித்தம் பார்ப்பதிலும் தவறவில்லை என்பது புலனாகிறது.

**இல்லுற தெய்வச்சடங்கு**

திருமணம் நிகழும் முன்னர் இல்லத்தில் தெய்வங்களை வணங்கும் பழக்கம் உண்டு என்பதை அகநானூறு பாடல் ஒன்று உணர்த்துகிறது.

**"இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து**

**எந்தையும் எதிர்ந்தனன், கொடையே; அலர்வாய்**

**அம்பல் ஊரும் அவனொடு மொழியும்**

**சாயிரைத் திரண்ட தோள்பா ராட்டி,**

**யாயும், அவனே என்னும்; யாமும்,**

**'வல்லே வருக, வரைந்த நாள்; 'என,**

**நல்இறை மெல்விரல் கூப்பி,**

**இல்லுறை கடவுட்கு ஓக்குதும், பலியே!"9 (அகம்: 282.11-18)**

இல்லத்தில் தெய்வங்களை வணங்கி அவற்றின் அருளை தலைவி பெற்றாள் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. மற்றும் அத்தெய்வங்களுக்கு பலியிடுதலும் உண்டு என இப்பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

**திருமண வீட்டை அலங்கரித்தல்**

திருமணத்திற்கு முன்பு தலைவன் தலைவி இல்லங்களை தூய்மை செய்வதும் சுவர்களுக்கு வர்ணம் பூசுதலும் இல்லத்தின் முன்பு பந்தல் அமைத்தல் புது மணல் பரப்பி மாயிலையினை தோரணங்களாக தொங்க விட்டு பூமாலையினை கொண்டு அழகு செய்வார்கள் இச்செயலினை,

**புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி,**

**மனைமணல் அடுத்து, மாலை நாற்றி,**

**உவந்து இனிது அயரும் என்ப"10 (அகம்:195.3-5)**

என்ற அகநானூற்று பாடல் அடிகள் மூலம் திருமண வீட்டை அலங்கரித்தல் குறித்த செய்தியை காண முடிகிறது.

**வழிபாட்டு சடங்குகள்**

உலகப்பார்வையில் தமிழர்களின் மொழி, பண்பாடு , நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவற்றை அறிவதற்கு எட்டுத்தொகை நூல்கள் துணைபுரிகின்றன. பழந்தமிழ் மக்களிடம் தெய்வம் பற்றிய நம்பிக்கைகள் நிறையக் காணப்பட்டது. அதன் விளைவாக வழிபாட்டுச் சடங்குகள் பல தோன்றின. தெய்வங்களை வழிபடும் போது சில சடங்கு முறைகளை செய்து வழிபட்டனர். தெய்வங்களை பெருந்தெய்வங்கள், சிறு தெய்வங்கள் என இரு வகையாகப் பகுப்பர். இவ்விரு தெய்வங்களுக்கும் வழிபாட்டு சடங்கானது பெரிதும் மாறுபட்டு காணப்படுகிறது.

**பக்திப்பாடல்கள்**

பழங்காலத்து மக்கள் காடு, மலை, குகைகளில் தங்கி இயற்கை வாழ்க்கை நடத்தினர். தங்களுக்குத் துணை புரிவது இயற்கைப் பொருள்கள் என நம்பி அவ்வியற்கைப் பொருளான மரம், காடு, மழை, புயல், இடி, மின்னல் முதலானவற்றை வழிபட்டனர். பின்பு இயற்கையினால் தங்களுக்கு அச்சம் ஏற்பட்ட பொழுது தங்களைப் பாதுகாக்கும்படி அவற்றை வழிபட்டுச் சடங்குகள் நிகழ்த்தினர். எனவேதான் உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டு அவர்கள் வழிபாடு பற்றி கருத்துச் சொல்லும் பொழுது, இயற்கையிடமும், மரணத்திற்குப் பின்பு வரக்கூடிய நிலையிடத்தும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படை என்று கருத்துச் சொல்வார். இயற்கையை வழிபட்ட மாந்தன பின்னாளில்

உருவ வழிப்பாட்டினை மேற்கொண்டான். தங்கள் முன்னோரையும், தங்களைக் காத்தவர்களையும் உருவம் சமைத்து வழிபட்டனர். பின்னாளில் இது மிகப்பெரும் வளர்ச்சியைப்பெற்றது.

தெய்வ வழிபாட்டை இருவகையாக இன்று பகுத்துப் பார்க்கலாம். 1. சிறுதெய்வ வழிபாடு, 2. பெருந் தெய்வ வழிபாடு. சிறு தெய்வ வழிபாடு என்பது முன்னோர் வழிபாடு, ஊர்காத்த வீரர் வழிபாடு என்ற வகையில் முன்பு இருந்தது. மாரியம்மன், காளியம்மன்,ஐயனார், சுடலைமாடன், மாடத்தி, அண்ணன்மார் சாமி, சங்கிலி கறுப்பு, பாப்பாத்திஅம்மன், வீரனார், பெரியாண்டவன் முதலான சிறு தெய்வங்களை இன்று வழிபடுகின்றோம். பெருந்தெய்வங்கள் என்பது வேதக் கடவுளோடு தொடர்புப்படுத்தப்பட்டிருக்கும். சமூகத்தில் மேல்நிலை மக்களால் வழிபடுவதாகும். பெருந் தெய்வங்களுள் சிவன், திருமால், பிள்ளையார். முருகன், ஐயப்பன் முதலியன குறிப்பிடத்தகுந்தன.

பெருந்தெய்வங்களை வழிபடச் சில வரையறைகள் உண்டு. திருவிழாக்கள், பூசனை முறைகள் உண்டு. ஆனால் சிறு தெய்வங்களை வழிபட எந்த வகையான வரையறை தன்மையோ இல்லை. நாமே தொட்டு வழிபட உரிமை உண்டு. வருவாய்க் குறைவுடன்,

ஊர்ப் புறத்திலோ, கொல்லைப் புறங்களிலோ சிறுதெய்வங்களுக்குச் சிறிய அளவிலான கோயில்கள் இருக்கும். சிறுதெய்வக் கோயில்களுக்குக் கடா வெட்டுதல், சேவல் அறுத்தல், பன்றி வெட்டுதல், எருமை வெட்டுதல் போன்ற புலால் படையல் உண்டு. பெருந்தெய்வங்களுக்கு மலர், சந்தனம், பால் முழுக்கு என வழிபாடு உண்டு. பெரும்பாலும் எழுத்து இலக்கியங்கள் பெருந்தெய்வ வணக்கத்திற்கு முதன்மை கொடுக்கும். சிறு தெய்வ வணக்கத்தில் நாட்டுப்புறத்தில் வழங்கும் பாடல்கள் பயன்படுத்தப்படும். உடுக்கை, பம்பை முதலான இசைக்கருவிகளை இசைத்து மாரியம்மனையும் பிற சிறு தெய்வங்களையும் வழிபடுவர். மகுடம் முதலான இசைக்கருவிகளை இசைத்துத் தென்தமிழகத்தில் இறை வழிபாடு நடத்துகின்றனர். பெருந்தெய்வ வணக்கத்தில் தாலாட்டு, கும்மி, ஏற்றப்பாட்டு அமைப்பில் பாடல்கள் இருக்கும்.

**அ. இயற்கை வழிபாடு**

இயற்கைப் பொருளான மலை, பாம்பு, பசு, நிலவு, கதிரவன் முதலானவற்றை வணங்கி மக்கள் தெய்வ வணக்கப் பாடல் பாடுகின்றனர் (சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் நிலவு, கதிரவன், மழை இவற்றை வாழ்த்தியதை நோக்குக). இதனை,

**சந்திரரே சூரியரே**
**சாமி பகவானே**
**இந்திரரே வாசுதேவா**
**இப்பமழை பெய்யவேணும்**
**மந்தையிலே மாரியாயி**
**மலைமேலே மாயவரே**
**இந்திரரே சூரியர**
**இப்பமழை பெய்யவேணும். (சு.ச,நா.இ.ஆ.ப.58)**

என்னும் பாடலடியால் உணரலாம்.

**ஆ.சிறுதெய்வ வழிபாடு**

சிற்றூர்ப் புறங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் என்று சிறு தெய்வங்கள் உண்டு. இவற்றைக் குல தெய்வம் என்றும் அழைப்பர். இச்சிறு தெய்வங்களைப் பல்வேறு சடங்குகள் செய்து வழிபடுவர். அவ்வாறு வழிபடும் பொழுது பாடல் இசைப்பது உண்டு. இப்பாடல்களில் தம் தெய்வத்தின் பெருமையும் அது விரும்பும் பூசைப்பொருட்களும் இடம்பெறுவது உண்டு. சில நேரங்களில் தெய்வம் மேலேறப்பெற்று பாடல்களைப் பாடுவதும் உண்டு.

**இ. பெருந்தெய்வ வழிபாடு**

பெருந்தெய்வ வழிபாடு தொடர்பாகப் பல பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை கும்மி, கோலாட்டம் முதலான அமைப்புகளில் பாடப்படுவது உண்டு.

நாட்டுப்புற தெய்வங்களை ஊர்த் தெய்வங்கள், இனத் தெய்வங்கள், குலத் தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள் என ஆறு வகையாக பகுக்கிறார் டாக்டர் துளசி இராமசாமி.

சங்ககால மக்களிடம் இருக்கும் நம்பிக்கை மற்றும் பழக்கங்கள் நாளடைவில் சடங்குகளாக மாறுகின்றன. நம்பிக்கையை பின்பற்றியதே சடங்கு முறைகள் ஆகும். சங்க இலக்கியங்களில் இயற்கை வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. முன்னரே குறிப்பிட்டுள்ளது போன்று மக்கள் தங்களின் சுற்று சூழலையும் தன்னுடைய ஆற்றலுற்கு அப்பாற்பட்டதாகக் கருதப்பட்ட நிலம், நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு, விலங்குகள், தாவரங்கள்,ஆறுகள், மலைகள் போன்றவற்றை கருதியும் வழிப்பட செய்தனர்.என்பதை,

**“விலங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு**
**வளம்கெழு மாமழை பயம்கெடத் தெறுதலின்,**
**அருவி ஆன்ற பெருவரை மருங்கில்**
**சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணாது”,11 (அகம் 91.1-4)**

என்னும் அகநானூறு பாடல் வரி மூலம் அறியலாம். அதாவது உலகம் விளங்குவதற்கு காரணமான பகலினைத் தந்துவிய ஞாயிறு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

**நீர்த்துறை தெய்வ வழிபாடு**

அந்தி பொழுதிலே கடற்கன்னியானவள் கரையில் நின்றிருப்பதையும் அந்த தெய்வத்தை அமைதிப்படுத்த மகளிர் வெறியாட்டம் நிகழ்த்தினர் என்பதை,

**“தண்ணரும் பைந்தார் துயில்வர அந்திக்**
**கடல்கெழு செல்வி கரைநின் றாங்கு**
**நீயே கானல் ஒழிய யானே**
**வெறிகொள் பாவையற் பொலிந்தஎன் அணிதுறந்து”12**
**(அகம்: 370.11-14)**

இப்பாடல் அடிகள் உணர்த்துகிறது

**கார்த்திகை திருவிழா**

சங்ககாலத்தில் மாதம் மும்மாரி மழை பெய்ததாக குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. கார்த்திகை மாதம் அதிக மழை பொழிவினால் விவசாயம் உட்பட எல்லா தொழில்களும் பாதிக்காமல் இருக்க மகளிர் தங்கள் வீட்டில் விளக்கு ஏற்றியும் மாலைகளைத் தொங்கவிட்டும் கார்த்திகை விழாவை கொண்டாடினர் என்பதை,

**"குறுமுயல் மறுநிறம் கிளர,மதி நிறைந்து**
**அறுமீன் சேறும் அகல்இருள் நடு நாள்:**
**மறுகுவளக் குறுத்து, மாலை தூக்கி,**
**பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய**
**விழவுஉடன் அயர, வருகதில்அம்ம!"13 (அகம்: 141.7-11)**

இப்பாடல் அடிகள் மூலம் மகளிர் கார்த்திகை விழாவினைக் கொண்டாடினர் என்;;பது குறித்த செய்திகளை அறியமுடிகிறது.

**பங்குனி திருவிழா**

சங்க காலம் தொட்டு இன்றைய காலகட்டம் வரை பங்குனி விழா எடுக்கும் மரபு தொடர்கிறது. இதனை,

**"வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்**
**இடுகடுங் கள்ளின் உறந்தை ஆய்கண்,**
**வருபுனல் நெரிதரும் இகுகரைப் போயாற்று**
**உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்**
**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்"14 (அகம்: 137.5-9)**

இப்பாடல் மூலம் பங்குனி மாதத்தில் உத்திரமும் நிறைமதியும் கூடிய நன்னாளில் பங்குனி உத்திர விழா நடைபெற்றதை அறிய முடிகிறது.

**வேப்பமர வழிபாடு**

பண்டைய தமிழர்கள் வேப்பமரத்தில் தெய்வம் குடியிருப்பதாக நம்பினர் இதனை

**"வயவாள் எறிந்து வில்லின் நீக்கி**
**பயநிரை தழீஇய கடுங்கண் மறவர்**
**அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தெனத்**
**தெய்வஞ் சேர்ந்த பார்ரைவேப்பிற்**
**கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்**
**புலவுப் புழுக்குண்ட வான்கண் அகலறைக"15 (அகம்: 309.1-6)**

என்ற அகநானூற்று பாடல் அடிகளில் மறவர்கள் கவர்ந்து கொண்டு வந்த பசுவினை கொன்று அதன் குருதியை வேப்ப மரத்தின் மீது தூவி தெய்வத்தை போற்றி வழிபட்டனர் என்பதை அறிய முடிகிறது பண்டைய தமிழர்கள் வேப்ப மரத்தை தெய்வமாக வழிபட்டனர் என்பதும் வேப்பமரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதும் இப்பாடல்கள் மூலம் புலனாகிறது

**கானமர் செல்வி வழிபாடு**

மாயோனுக்கு முன்னரே காடுறை கடவுளாக தாய் தெய்வம் இருந்தது என்பதை,

**"நாம்செல விழைந்தன மாக ஓங்கு புகழ்க்**
**கான்அமர் செல்வி அருளலின் வெண்கால்**
**பல்படைப் புரவி ஏய்திய தொல்லிசை**
**நுணங்குநுண் பனுவர் புலவன் பாடிய"16 (அகம்: 345.3-6)**

என்னும் அகநானூறு பாடல் வரிகளில் செல்வியின் அருளால் மன்னன் நனன் வெண் கால்களை உடைய குதிரைகளைப் பெற்றான் என்பதை காட்டுகிறது.

**நடுகல் சடங்குகள்**

போரில் வீர மரணம் அடைந்த வீரனுக்கு நடுகல் எடுத்து வழிபடுவது தமிழர்கள் வழக்கமாகும். ஆநிரை கவர்ந்து வந்து இறந்த வீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் நிலவிய நடுகல் வழிபாடு சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. கரந்தை வீரர்கள் பலர் இறந்தபொழுது போரில் பிழைத்த வீரர்கள் இறந்த வீரர்களுக்கு இயற்கையாக நடுகல் வைத்தனர். இதனை,

**"பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்,**
**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்**
**அகலிடம் குயின்ற பல்பெயர் மண்ணி,**
**நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய**
**அம்புகொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்**
**செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி**
**வரிவண்டு ஆர்ப்பச் சூட்டிக் கழற்கால்**
**இளையர்பதிப் பெயரும் அருஞ்சுரம் இறந்தோர்,"17**
**(அகம்: 269.6-13)**

என்ற மருதன் இளநாகனார் பாடல் வழி அறியலாம்.சங்க காலத்தில் நடுகற்கள் மயற்பீலி சூட்டப்பட்டு நடுகல்லிற்கு முன் கலசத்தில் கள் வைத்து நடுகற்களை சுற்றி வேல்கள் அரணாக நடப்பட்டு இருப்பதை,

**"வீளை அம்பின் விழுத்தொடை மழவர்**
**நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து**
**நடைமெலிந்து ஒழிந்த சேட்படர் கன்றின்**
**கடைமணி உகுநீர் துடைத்து ஆடவர்**
**பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்,**
**பிலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**
**வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்"18 (அகம்: 131.6-12)**

என இப்பாடல் உணர்த்துகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்கள் வாழ்க்கை முறை அகம் புறம் என இரு பிரிவுகள் இருந்ததாகவும் அகவாழ்வில் மட்டும் காதல் சிறப்பிடம் பெற்றது என்ற செய்தி அறிய முடிகிறது. ஆண் பெண் இருவருக்கும் திருமண நாள் என்பது மறக்க இயலாத மறுக்க முடியாத இனிய நாளாக அமைகிறது எனவும் திருமணம் முறையில் எண்ணற்ற சடங்குகள் இடம் பெற்றுள்ளது என்பதை அகநானூற்று பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. மண முறை, மண அறிவிப்பு செய்தல், வெண்ணூல் சூட்டுதல், நிமிர்த்தம் பார்த்தல், இல்லுற தெய்வச்சடங்கு, திருமண வீட்டை அலங்கரித்தல் போன்ற திருமண சடங்குகள் பற்றிய செய்தியை அறிய முடிகிறது. பழந்தமிழ் மக்களிடம் தெய்வம் பற்றிய நம்பிக்கைகள் நிறைய காணப்பட்டது என்ற செய்தி அறிய முடிகிறது. பழங்காலத்து மக்கள் காடு, மலை, குகைகளில் தங்கி இயற்கை வாழ்க்கை நடத்தினர். தங்களுக்கு துணை புரிவது இயற்கை என நம்பி அவ்வியற்கையான மரம், காடு, மலை, மழை, இடி, மின்னல், புயல் முதலானவற்றை வழிபட்டனர் என்ற செய்தி அறிய முடிகிறது. இயற்கை வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு, நாட்டுப்புற தெய்வங்கள் பற்றிய செய்தி அறிய முடிகிறது. எட்டுத்தொகை நூலான அகநானூற்றில் நீர் துறை தெய்வ வழிபாடு, கார்த்திகை திருவிழா, பங்குனி திருவிழா, வேப்பமர வழிபாடு, கானாமர் செல்வி வழிபாடு, நடுகல் சடங்குகள் போன்ற தெய்வ சடங்குகள் பற்றிய செய்திகள் அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.தமிழ் இலக்கிய வரலாறு ப - 50
2.அகநானூறு புலியூர்க் கேசிகன் ப – 164
3.மேலது ப – 264
4.மேலது ப - 275
5.மேலது ப - 440
6.மேலது ப - 265
7.மேலது ப - 275
8.மேலது ப - 264
9.மேலது ப - 564
10.மேலது ப - 385
11.மேலது ப - 175
12.மேலது ப - 763
13.மேலது ப - 275
14.மேலது ப - 267
15.மேலது ப - 626
16.மேலது ப - 707
17.மேலது ப – 537, 538
18.மேலது ப - 255

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.